செ.வெ.எண்:997 17.11.08

# மேட்டூர் அனல் மின் நிலையத்தை விரைவாக முடிக்க மின்துறை அமைச்சர் அறிவுறுத்தல்

தமிழ்நாடு மின்சார வாரியம் கடந்த 25ம்தேதி ஜுன் 2008 அன்று 600 மெகாவாட் மேட்டூர் அனல்மின் நிலையத்திற்கான ஒப்பந்தத்தை பி.ஜி.ஆர் எனர்ஜி சிஸ்டம்ஸ் என்ற நிறுவனத்திற்கு ரூ.3,100 கோடிக்கு வழங்கியது. இதன்படி, மேட்டூர் அனல் மின் நிலையத்தின் கட்டுமானம் செப்டம்பர் 2011ல் முடிந்து செயல்படத் துவங்கவேண்டும். இதற்கான கொதிகலன் மற்றும் மின் உற்பத்தி இயந்திரங்கள் சீனாவின் டாங்பேங் எலக்ட்ரிக் கார்ப்பரேசன் என்ற நிறுவனத்திடமிருந்து இறக்குமதி செய்யப்பட உள்ளது. டாங்பேங் சீனாவின் மத்திய அரசின் நிறுவனம். இது சீனாவின் மிகப்பெரிய கொதிகலன் மற்றும் மின் உற்பத்தி இயந்திரங்கள் தயாரிக்கும் நிறுவனம் ஆகும். இதன் வருடாந்திர உற்பத்தி அளவு 33,000 மெகாவாட் அளவாகும். இந்நிறுவனத்தின் தலைவர் திரு. ஸீ ஸெவு அவர்களின் தலைமையிலான உயர்மட்டக்குழு 17.11.2008 அன்று திட்டத்திற்கான பூர்வாங்க பணிகளை மேற்கொள்ள சென்னை வந்தது. இக்குழு மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு ஆற்காடு நா. வீராசாமி அவர்களை தலைமை செயலகத்தில் சந்தித்தது. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தலைவர் திரு மச்சேந்திரநாதன் மற்றும் தமிழ்நாடு எரிசக்தித்துறை செயலர் திருமதி ஸ்மிதா நாகராஜ் அவர்களும் உடன் இருந்தனர். அந்த சந்திப்பின் பொழுது, மின்துறை அமைச்சர் மேட்டூர் அனல் மின்நிலையப் பணிகளை ஜனவரி 2011க்குள் முடிக்கும்படி பி.ஜி.ஆர் எனர்ஜி சிஸ்டம்ஸ் மற்றும் சீன கம்பெனியான டாங்பேங் நிறுவனத்தையும் கேட்டுக்கொண்டார். திரு. ஸீ ஸெவு அவர்கள் தங்களால் முயன்ற அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு அமைச்சரின் வேண்டுகோளை நிறைவேற்ற முயற்ச்சிப்பதாக உறுதிகூறினார். மேலும், இத்திட்டத்தை விரைவில் நிறைவேற்ற பிஜிஆர் எனர்ஜி சிஸ்டம்ஸ் மற்றும் டாங்பேங் நிறுவனத்திற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் தமிழக அரசின் முழு ஒத்துழைப்பையும் தர அமைச்சர் உறுதி அளித்தார்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் து...
தலைமைச் செயலகம், செ...